## அண்ணாமலை திரையரங்கம், மதுரை

சற்று காலதாமதம் ஆனா பதிவுதான் நேர இன்மை காரணமாக இப்போது உங்கள் வாசிப்புக்கு. நாம் எடுக்கும் புகைப்படங்களில் எப்போதும் ஒரு சிறிய கதை சொல்ல வேண்டும் என்ற ஆசை என்னுள் உண்டு, அதில் ஓர் சிறிய முயற்சி தான் இந்த பதிவு.




மதுரை என்றாலே நினைவுக்கு வருவது கோவில்களும், கார சார உணவுகளும் தான் இவற்றை தவிர பொழுதுபோக்கு மதுரையில் இடங்கள் சற்று குறைவு தான். அதனால் தான் என்னவோ மதுரையில் திரையரங்குகள் ஒரு காலத்தில் பொழுதுபோக்குக்காக கொடி கட்டி பறந்தது. மதுரையில் விமர்சனம் ரீதியாக திரைப்படம் வெற்றி பெற்றால் தமிழகத்தில் அணைத்து இடங்களிலும் வெற்றி பெரும் என்று ஓர் உதாரணம்.

இன்றைய பதிவில் மதுரையின் பழமையும், புதுமையும் கலந்த ஓர் கம்பீரம் தோற்றம் கொண்ட நம் அண்ணாமலை திரையரங்கை பற்றி பார்ப்போம்.

அண்ணாமலை திரையரங்கம் பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் நண்பர்களுடன் அதிகம் சென்று ஒன்று. அன்றைய அல்டிமேட் ஸ்டார், இளைய தளபதியை கண்டு ரசித்த இடம். குறிப்பாக தல தளபதியின் முகவரி, ரெட், திருப்பாச்சி, சிவகாசி, சச்சின் போன்ற படங்களுக்கு முதல் நாள் முதல் கட்சி சென்ற அனுபவமும் இறுதியாக உயிர் நண்பனுடன் தொட்டி ஜெயா திரைப்படம் கண்டது என் மனதில்.







கல்லூரி நாட்களில் சென்ற திரையரங்குக்கு மீண்டும் சென்று அந்த நாட்களை நினைவு கொள்ளவேண்டும் என்ற ஆசையில் கல்லூரியை மட்டம் அடித்து சென்றது போல் ஓர் வார நாளில் அலுவலகத்திற்கு மட்டம் அடித்து வந்துவிட்டேன் லியோ திரைப்படம் காண தனிமையில்.

புதுமையாக பல திரையரங்குகள் வந்து விட்டாலும் அதற்கு ஈடாக வெளிதோற்றத்தில் பழமையும் உள்புறத்தில் புதுமையும் கொண்டு கம்பீரமாக காட்சியளித்தது. பூக்களை போல திரையரங்குக்கு என்று ஒரு மனம் உண்டு, அதை நான் மீண்டும் அங்கு உணர்ந்தேன். இருக்கைகளும், ஒளி அமைப்பும் அன்றும், இன்றும் எங்கள் அண்ணாமலை திரையரங்கில் தனி சிறப்பு தான். குறிப்பாக நிறைந்த பார்க்கிங் வசதி கொண்டவை.






டிக்கெட் கவுண்டரில் எதிர்பார்ப்புடன் காத்திருந்த நாட்கள் மற்றும் DTS சவுண்ட் என்று போடும் காட்சியை காண முந்தி ஓடிய நாட்கள் பல. சைக்கிளில் நண்பர்களுடன் கூட்டமாக வந்த திரையரங்குக்கு தனிமையில் சென்றது ஓர் சுகமான வலி தான் என்றாலும் அழகிய நினைவுகளை திரும்பிப்பார்க்க கிடைத்த வாய்ப்பு மற்றும் அன்று இடைவேளையில் ஒரு பாப்கார்ன், ஐஸ்கிரீம் வாங்குவதற்கு கைகளில் குறைவாக பணம் இருந்த போதும் நண்பர்களுடன் பகிர்ந்து உண்டோம். ஆனால் இன்று கைகளில் போதிய பணம் இருந்தும் நண்பர்கள் தான் இல்லை என்ற வருத்தம் இருந்தது என்னுள்.




கேன்டீன் மற்றும் திரையரங்கில் அன்று பார்த்த சில ஊழியர்களை இன்று பார்த்தவுடன் சிறு புன்னகை ஒரு தனி இன்பம் தான் என்றாலும் அனைவரின் முகத்தில் சுருக்கங்களும், தலைமுடியில் சிறு நரைத்தலை கண்டு என் வயதை நினைவு கொண்டேன்.

பிலிம் ஆபரேட்டர் ஆக இருந்த அண்ணன் இன்று கேன்டீன் வேலை பார்ப்பது கஷ்டமா இருந்தாலும் அவர்கள் திரையரங்கை மட்டும் நம்பி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்று உணர்ந்தேன். OTT தளங்கள் மற்றும் ஆன்லைன் வந்த நிலையில் இன்று தனி திரையரங்கு நடத்துவது பெரும் சுமைதான், எனினும் மக்கள் ஆகிய நாம் முடிந்த வரை திரையரங்கிற்கு சென்று அவர்களில் வாழ்வாதாரத்திற்கு துணையாக கை கொடுக்க வேண்டும்.




மல்டிபிளக்ஸ்கல் அதிகம் இருக்கும் காலத்தில் இன்றும் அதற்கு ஈடாக தொழிநுட்பங்களை வைத்து திரையரங்கை வெற்றிகரமாக நடத்தும் நிர்வாகத்திற்கு நன்றியும், என் வாழ்த்துக்களும்.




இறுதியில் இளைய தளபதியாக இருந்த விஜய் அவர்கள் இன்று தளபதி யாக மாறிய லியோ படத்தை கண்டு ரசித்து சில அழகிய நினைவுகளுடன் வீடு திரும்பினேன் திரைப்பட ரசிகனாக.

- எழுத்தும், எண்ணமும், புகைப்படமும்

**கோபிநாத் முருகேசன்**